BRIDGE to EQUALITY

සමානාත්මතාවය සොයා...
சமத்துவத்தை தேடுதல்...

# இலங்கையில் பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு தொடர்பான சட்டத்திட்டங்கள்



# அறிமுகம்

BRIDGE to Equality திட்டமானது இலங்கையில் LGBTI சமூகத்திற்க்கு உசாத்துணையாக திகழக்கூடிய இந்த கையேட்டினை அறிமுகப்படுத்துகின்றது. இந்த ஆவணமானது பல சமூகத் தலைவர்களிடம் நடத்தப்பட்ட சமூக ஆலோசனைகளை தொடர்ந்து அவர்களின் அனுபவங்கள் மற்றும் சமூகத்திற்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட ஒரு சட்ட ஆவணம் தொடர்பான அவர்களின் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.



# உள்ளடக்கம்


- சட்டம்: அலைந்து திரிவோர்
- சட்டம்: பாலியல் தொழில்
- அடிப்படை உரிமைகள்
- கொள்கைகள்: பாலின அங்கீகாரச் சான்றிதழ்
- இலங்கை காவல்துறை
- நிவர்த்திக்கான நிறுவனங்கள்
- அவசரத் தொடர்புகள்:




# சட்டம்: அலைந்து திரிவோர்

## 1841 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம்

**பிரிவு 3:** தரித்திருத்தல் மற்றும் ஒழுங்கற்றவற்களாக கருதப்படும் நபர்கள்

பொது இடங்களில் ஆக்ரோஷமாக மற்றும் ஒழுங்கீனமாக நீங்கள் நடந்து கொள்ளும் சந்தர்ப்பத்தில்.

*உதாரணமாக:*

நீங்கள் நோக்கமின்றி அலைந்து திரிவது அல்லது பொது இடத்தில் தரித்திருப்பது கண்டறியப்பட்டால்

**பிரிவு 3: தரித்திருத்தல் மற்றும் ஒழுங்கற்றவர்களாக கருதப்படுபவர்கள்.**

சட்டம்: அலைந்து திரிவோர்

நீங்கள் உடற் வலுவுள்ள நபராக இருக்கும் பட்சத்தில்

- நோக்கத்துடன் தங்களைத் தாங்களே பராமரிக்க மறுக்கின்ற போது,
- ஆக்ரோஷமாக அல்லது ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்கின்ற போது
- எந்த நோக்கமும் இல்லாமல் அலைந்து திரிதல் மற்றும் தரித்திருக்கும் போது
- ஏதேனும் வீடு/கட்டிடத்தின் பக்கத்தை அல்லது சுவரொட்டியை சிதைத்தல்

பொது இடங்களில்,

தரித்திருத்தல் மற்றும் ஒழுங்கற்றவற்றகளாக கருதப்படும் போது

ஒரு போலீஸ் அதிகாரியால் பிடியாணை இல்லாமல் கைது செய்யப்படலாம்.

**பிரிவு** 7: ‘வலிந்தழைத்தல்’, ‘மிக்க இழிவான செயல்கள்’ மற்றும் ‘பொது இடங்களில் அலைந்து திரிதல;’

**பிரிவு 7: பொது இடங்களில் வலிந்தழைத்தல் மற்றும் மிக்க இழிவான செயல்கள்**

நீங்கள் கீழ் கண்டவற்றை முன்னெடுத்தால் அல்லது ஈடுபட்டால்:

நீங்கள் ஒரு குற்றம் செய்தவராக கருதப்பட்டு போலீசார் உங்களை பிடியாணை இல்லாமல் கைது செய்யலாம்.

- சட்டவிரோத பாலியல் செயல்பாடு
- மிக்க இழிவான செயல்கள்
- அமைக்கப்பட்ட சட்டங்களுக்கு எதிராக அல்லது அனுமதியின்றி பொது இடத்தில், அல்லது
- தனிப்பட்ட இடமொன்றில் நீங்கள் அங்கு இருப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தைக் கூற முடியாத போது

# சட்டம்: பாலியல் தொழில்

இலங்கையில் பாலியல் தொழில் குற்றமில்லை.

அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டத்தின் 7வது பிரிவின்படி, பொது இடத்தில் வலிந்தழைத்தல் செய்வதே குற்றமாகும்.

விபச்சார விடுதியை நடத்துவதை விபச்சார விடுதி கட்டளை சட்டம் தடை செய்கிறது.

## 1889 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க விபச்சார விடுதி கட்டளை சட்டம்

**பிரிவு 2.**

- நீங்கள் ஒரு விபச்சார விடுதிக்கு உரிமையாளராக இருக்கும் போது அதனை நிர்வகிக்கும் போது அல்லது நிர்வகிக்க உதவும் போது,
- நீங்கள் பொதுவாக விபச்சாரத்திற்கு பயன்படுத்தப்படும் இடத்தில் வசிக்கிறீர்கள் என்றால்
- விபச்சார விடுதி என்று உங்களுக்குத் தெரிந்த இடத்தில் உங்களுக்னு ஓரளவுக்கு உரிமை இருந்தாலும்

நீங்கள் ஒரு குற்றம் புரிந்தவராக கருதப்படுவீர்கள்.

ஒரு விபச்சார விடுதி என்பது பெண்களுடன் உடலுறவு கொள்வதற்காக ஆண்கள் மீண்டும் மீண்டும் வரும் இடமாக வரையறுக்கப்படுகிறது.

## தண்டனை சட்டக் கோவையில் பிரிவு 360அ

பிரிவு 1: ஒருவரை விபச்சாரியாக சேர்ப்பது குற்றம்.

**பிரிவு 1**

விபச்சாரம் செய்வதற்கு எந்த வயதிலும் ஒரு ஆண் அல்லது பெண்ணை நீங்கள் பணியமர்த்தினால் அல்லது பணியமர்த்த முயற்சித்தால்.

## <u>அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம்</u>

பிரிவு 9: ஒரு நபர் மற்றொருவரின் விபச்சாரத்தின் மூலம் சம்பாதித்தால் அது குற்றமாகும்.

**பிரிவு 9 (1) (அ):**

விபச்சாரத்தில் இருந்து பிறர் சம்பாதிப்பதில் தெரிந்தே நீங்கள் வாழ்ந்தால் அது குற்றமாகும்.

குறிப்பு: ஆணுறைகளை எடுத்துச் செல்லும்போது:

ஆணுறை எடுத்துச் செல்வது அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தின்படி குற்றமாகாது. ஆணுறை ஒரு மருத்துவ சாதனம் மற்றும் பாலியல் வேலைக்கான ஆதாரமாக அதை கருத முடியாது.



# அடிப்படை உரிமைகள்

(A) ஒவ்வொரு "நபருக்கும்" கிடைக்கும் உரிமைகள்

உறுப்புரைகள்

- 10. சிந்தனை செய்யும் சுதந்திரம், மனசாட்சியை பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம்.
- 11. ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவாக நடத்தப்படாமல் இருப்பதற்கான சுதந்திரம்
- 12. சட்டத்தின் முன் சம உரிமை மற்றும் சட்டத்தின் முன் சம பாதுகாப்பு
- இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்து அல்லது பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படக் கூடாது.
- 13. எதேச்சையாக கைது செய்ப்படாமல் இருப்பதற்க்கான சுதந்திரம்.
- சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைகளின்றி எந்த ஒரு நபரும் கைது செய்யப்படலாகாது. கைது செய்யப்படுவதற்கான காரணம் கைது செய்யப்படும் எவரேனும் ஒரு நபருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
- சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்கு மேல், நீதிமன்ற உத்தரவு இல்லாமல் கட்டுக் காவலில் வைக்கப்படக்கூடாது.
- தவறொன்று குற்றம் சாட்டப்படும் நபரொருவர் தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் நடாத்தப்படும் நியாயமான விளக்கத்தில் அவரே நேரடியாக அல்லது சட்டத்தரணி மூலம் உரைப்பதற்கு உரித்துடையவர் ஆவார்.
- சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின்படி ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையொன்றின் மூலமல்லாமல் மரண தண்டனை அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடாது.
- குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதி/ சுத்தவாளியென என்று கருதப்படும் உரிமை.
- புரியும் போது குற்றமல்லாத செயலுக்கு தண்டிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை,
- உதாரணம்: புரியப்பட்ட நேரத்தில் தவறொன்றாக இருந்திராத ஏதேனும் செயல்
- 14. பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம்
- வெளியிடுதலுட்பட பேச்சு சுதந்திரமும், கருத்து தெரிவித்தல் சுதந்திரம்
- அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம்
- ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம்
- ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கும் அதில் சேருவதற்கும் சுதந்திரம்
- தனது மதத்தை வழிபட அனுசரிக்க, சாதனையிலும், போதனையிலும், வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம்
- தனியாக அல்லது மற்றவர்களுடன் இணைந்து, ஒருவரின் சொந்த கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கும், ஒருவரின் சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்குள்ள சுதந்திரம்
- எந்தவொரு சட்டபூர்வமான முயற்சியில், உயர் தொழிலில், வியாபாரத்தில் வர்த்தகம், அல்லது நிறுவனத்தில் ஈடுபடுவதற்கான சுதந்திரம்
- தடையின்றி நடமாடும் சுதந்திரம் மற்றும் இலங்கைக்குள் விரும்பும் இடத்தில் ஒருவரின் வசிப்பிடத்தைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம்
- இலங்கைக்கு திரும்பி வருவதற்கான சுதந்திரம்

## அடிப்படை உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள்

உறுப்புரை 15 இதனடிப்படையில் சில விடயங்களை கருத்திற்கொண்டு மட்டுப்பாடுகள் வழங்கப்படலாம்.

கீழ்வரும் நலன்களுக்காக,

- பொது மக்களின் பாதுகாப்புடன் தொடர்புடைய தேசிய பாதுகாப்பின் அடிப்படையில்.
- இன மற்றும் மத சமுக வாழ்வின் நலன்களுக்காக
- பாராளுமன்ற சிறப்புரிமை தொடர்பாக, நீதிமன்ற அவமதிப்பு, மான நட்டம் அல்லது குற்றத்திற்கு தூண்டுதல்.
- தேசிய பொருளாதாரத்தின் நலன்களுக்காக.
- ஒரு ஜனநாயக சமுதாயத்தின் பொது நலனுக்காக பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கத்தை பாதுகாத்தல்.

## உறுப்புரை 17 அடிப்படை உரிமைகள் மீறலுக்கான பரிகாரம்.

ஒவ்வொரு நபரும் ஆட்சித்துறை நடவடிக்கை அல்லது நிர்வாக நடவடிக்கை மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ள போது அல்லது உடனடியாக மீறப்படும் என்று எண்ணும் போது உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்க உரித்துடையவராவார்.

## உறுப்புரை 126 அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கமும் அதன் பிரயோகித்தலும்

அடிப்படை உரிமை மீறல்கள் குறித்து முடிவெடுக்க உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம்/ நியாயாதிக்கம் உள்ளது.

அடிப்படை உரிமை மீறப்பட்டும் போது ஒரு மாதத்திற்குள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த ஒரு மாத கால அவகாசத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நீங்கள் அம்மீறல் தொடர்பான புகாரளிக்கலாம். அப்போது இந்த ஒரு மாத கால வரையறை என்பது பொருட்படுத்தப்பட மாட்டாது.

# கொள்கைகள்: பாலின அங்கீகாரச் சான்றிதழ்

சுகாதார அமைச்சினால் 16.06.2016 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கை எண்: 01-34/2016 "திருநங்கை சமூகத்தினருக்கு பாலின அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதல்"

- பிறப்புச் சான்றிதழில் பாலினத்தை மாற்றுவதற்கான செயல்முறைக்கு உதவ மனநல விசேட வைத்திய நிபுணர் GRC ஐ வழங்க உள்ளார்.
- 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது
- அது பிறப்புச் சான்றிதழில் காட்டப்பட வேண்டிய பாலினத்தை குறிக்கும்
- மனநல விசேட வைத்திய நிபுணர் மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் நிறுவனத்தின் தலைவரால் சான்றளிக்கப்படும்.
- பிறப்புச் சான்றிதழில் திருத்தத்தைத் தொடர்ந்து, நபர்கள் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் கல்விச் சான்றிதழ்கள் போன்றவற்றுக்கு விண்ணப்பிக்க முடியும்.

**சுற்றறிக்கை:**

ஆங்கிலம்:
http://www.health.gov.lk/CMS/cmsmoh1/viewcircular.php?cno=01-34/2016&med=english

தமிழ்:
http://www.health.gov.lk/CMS/cmsmoh1/viewcircular.php?cno=01-34/2016&med=tamil

சிங்களம்:
http://www.health.gov.lk/CMS/cmsmoh1/viewcircular.php?cno=01-34/2016&med=sinhala

# இலங்கை காவல்துறை

## குற்றச் செயல் குறித்து காவல்துறையில் முறைப்பாடு செய்தல்

உங்கள் பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு எதுவாக இருந்தாலும், இலங்கை காவல்துறையிடம் முறைப்பாடு செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது.

**கே: எங்கே முறைப்பாடு செய்வது?**

ஒரு முறைப்பாடானது பொதுவாக குற்றம் நடந்த இடத்திற்கு அருகில் பதிவு செய்யப்பட வேண்டும்.

**கே: எப்போது நீங்கள் முறைபாட்டினை செய்ய வேண்டும்?**

குற்றம் நடந்த உடனேயே.

**கே: காவல் நிலையத்தில் என்ன செய்ய வேண்டும்?**

போலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் (OIC) உடன் பேசுங்கள். அவர்கள் முறைப்பாடு எடுக்கும் பிரிவிற்கு அனுப்புவார்கள். அவர்களால் உங்கள் முறைப்பாட்டு விண்ணப்பத்தை மறுக்க முடியாது.

(உதாரணம்: அது ஒரு கொள்ளை சம்பந்தப்பட்ட முறைப்பாடாக இருந்தால், நீங்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு (**CID**) அனுப்பப்படுவீர்கள், போன்றவை)

**கே: அவர்கள் முறைபாட்டினை ஏற்க மறுத்தால் என்ன செய்வது?**

உதவி காவல் கண்காணிப்பாளரிடம் (ASP) பேச கோரிக்கை விடுத்தல். காவல்துறையினரிடம் உங்கள் அடிப்படை உரிமைகள் அவர்களால் மீறுபடுகிறது என்பதை தெரிவிக்கவும்.

**கே: முறைப்பாடு செய்யும்போது என்ன தகவல்களை கண்டிப்பாக வழங்க வேண்டும்?**

- உங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுங்கள் (முழு பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், வயது, தொழில், வசிப்பிடம், தொடர்பு விபரங்கள்)
- சம்பவம் நடந்த நேரம், திகதி, இடம்
- குற்றம் சாட்டப்பட்டவரை விபரிக்கவும் (தெரிந்த அளவு விபரங்கள், முன்னுரிமையாக பெயர், பாலினம், வயது, தொழில்/பதவி)
- குற்றச்சாட்டை விவரிக்கவும் (உதாரணம்: பாலியல் துன்புறுத்தல், என்ன வகையான துன்புறுத்தல், அதை நீங்கள் அந்தளவு உணர அவர்கள் செய்தது என்ன)
- நீங்கள் தேடும் பரிகாரம் என்ன (நீதிமன்றம் செல்லல், தீர்வு காணல், இழப்பீடு போன்றவை)

**கே: முறைப்பாடு எழுதப்பட்ட பின் எவற்றை எதிர்பார்க்கலாம்?**

காவல்துறை அதிகாரி உங்கள் முறைபாட்ன் பின்னான நடவடிக்கைகள் குறித்த வழிமுறைகளை உங்களுக்கு வழங்க வேண்டும்.

தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதி பத்திரம் போன்றவை காணாமல் போனால் உங்கள் புகாரின் நகலைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு.

பிந்தைய விசாரணை திகதியில் தவறான ஆதாரங்களைத் தூண்டினால், முறைப்பாட்டின் நகல் உங்களுக்கு வழங்கப்படாது.

நீங்கள்தான் குற்றம் சாட்டப்பட்டவராக இருந்தால், முறைப்பாட்டின் நகலைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு.

**கே: காவல்துறை தவறிழைத்தால் என்ன செய்வது?**

இலங்கை காவல்துறையின் நடவடிக்கைகள் குறித்து நீங்கள் முறைப்பாடு செய்ய விரும்பினால்

- பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு (PCID) அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மாகாண அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் முறைப்பாடு அளிக்கவும்.
- மாகாண அலுவலகம் மூலம் பெறப்பட்ட பொதுமக்கள் முறைப்பாடுகள் மீதான விசாரணையை மேற்கொள்ள ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மாகாண பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருப்பார். அவர் ஆணைக்குழுவிலுள்ள உள்ள PCID இயக்குனருக்கு நேரடியாகப் அறிவிப்பார்.
- பொலிஸ் அதிகாரி அல்லது பொலிஸ் சேவைக்கு எதிராக பெறப்பட்ட எந்தவொரு பொதுமக்கள் முறைப்பாடும் ஒரு வாரத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பு: புகார் கொடுக்க காவல் நிலையத்திற்குச் செல்லும்போது, உங்களுடன் சட்டத்தரணியை அழைத்துச் செல்வது நல்லது.

**குறிப்பு:**

## பாலியல் வன்முறை பற்றிய முறைப்பாடு

டி.என்.ஏ (DNA) ஆதாரத்தை அழிக்காமல் உடனடியாக காவல்துறைக்கு செல்வது நல்லது.

நீங்கள் முதலில் மருத்துவமனைக்குச் சென்றால், நீங்கள் காவல்துறையில் புகார் செய்ய விரும்புகிறீர்கள் என்று தெரிவிக்கவும்.

மருத்துவப் பரிசோதனைகள், கைரேகைகள் (Fingerprints), DNA சோதனைகள் போன்றவை காவல்துறை சாட்சி சேகரிப்பில் அடங்கும்.

## கைது அல்லது தடுப்புக்காவலில் உள்ளவர்களின் உரிமைகள்

உறுப்புரை 13ன் படி, நீங்கள் கைது செய்யப்பட்டாலும்கூட உங்களுக்கு அடிப்படை உரிமைகள் இருக்கும்.

உங்களின் பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு எதுவாக இருந்தாலும் கைது செய்யும்போது பொலிஸ் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றியே ஆகவேண்டும்

- கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை உங்களுக்குத் தெரிவித்திருத்தல்.
- கைது செய்யும் அதிகாரி சீருடையில் இல்லை என்றால், அவர்கள் தங்கள் பெயர், பதவி, இலக்கம் மற்றும் போலிஸ் நிலையம் என்பவற்றை குறிப்பிட்டு தங்களை அடையாளப்படுத்த வேண்டும்.
- தடுப்புகாவலில் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் அருகில் உள்ள தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியின் முன் கொண்டுவரப்பட வேண்டும்.
- நீங்கள் பிடியாணை (Warrant) இல்லாமல் கைது செய்யப்பட்டால், ஒரு நீதிபதி முன் ஆஜர்படுத்தப்படும் வரை 24 மணிநேரம் மாத்திரமே காவல்துறையால் உங்களை தடுப்புகாவலில் வைக்க முடியும்.

குறிப்பு: ஒரு தேடுதலின் நடவடிக்கையின் போது தேடலுக்கான காரணத்தையும் சந்தேகத்திற்கான நியாயமான காரணத்தையும் காவல்துறை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

- ஒரு பெண் கைது செய்யப்படும் போது, பெண் பொலிஸ் அதிகாரி கண்டிப்பாக இருக்க வேண்டும்.
- உடற்சோதனைக்கு உங்களை முன்னிலைப்படுத்தும் போது நீங்கள் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தேடுதலுக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லுமாறு நீங்கள் கோர முடியும்.

கைது செய்யப்பட்டவுடன், கைதுசெய்யப்பட்டதை கைது செய்யப்பட்ட நபருக்கு தெரிந்தவர், நண்பர், குடும்பத்தினர் அல்லது சட்டத்தரணிக்கு தெரிவிக்க வேண்டிய கடமை காவல்துறை அதிகாரிக்கு உள்ளது.

நீங்கள் தடுப்புகாவலில் வைக்கப்பட்டால், தேவையான அடிப்படை பொருட்களை (உடைகள், தண்ணீர் மற்றும் உணவு) போன்றவற்றை கொண்டுவர கோர முடியும்.

# நிவர்த்திக்கான நிறுவனங்கள்

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

**2015 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க குற்றச் செயல்களுக்கு பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்**

(இல.428/11A, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல)

குற்றச்செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குதல்.

உதாரணம்: நீங்கள் ஒரு ஆள் அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்டு, பயந்து உங்கள் பாதுகாப்பிற்காக ஒரு படி பின்வாங்கினால்.

**2005ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம்**

குடும்ப வன்முறைச் செயலை அனுபவிக்கும் அல்லது அனுபவிக்க வாய்ப்புள்ள எவரும் பாதுகாப்பு கட்டளையொன்றிற்காக நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

14 நாட்கள் வரை செல்லுபடியாகும் இடைக்கால பாதுகாப்பு ஆணையை நீதவான் நீதிமன்றம் பிறப்பிக்க முடியும்.

நீதிமன்றம் 12 மாதங்களுக்கு செல்லுபடியாகும் பாதுகாப்பு உத்தரவை பிறப்பிக்க முடியும்.

இது வன்முறையால் பாதிக்கப்படுபவரின் பாதுகாப்பிற்காகவாகும்.

குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் (PDVA) பாலின நடுநிலை சொற்களைப் பயன்படுத்துகிறது, எனவே, பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு ஐப் பொருட்படுத்தாமல் எந்தவொரு நபரும் முறைப்பாடு செய்யலாம்.

அவர்களின் ‘துணை’, ‘முன்னாள்-துணை’ அல்லது ‘இணைந்து வாழும் துணை’ ஆகியோரிடமிருந்து பாதுகாப்பு கோரி விண்ணப்பத்தை தாக்கல் செய்ய முடியும்.

இந்தச் சட்டத்தின் கீழ் உடல் வன்முறை மற்றும் உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம் இரண்டும் “குடும்ப வன்முறை“ ஆகும்.

# அவசரத் தொடர்புகள்:

## அரச உதவி எண்கள்

**காவல்துறை**

அவசர உதவி எண்: 118/119

காவல்துறை அவசரநிலை : 011-2433333

நடமாடும் அவசர பொலிஸ்படை: 011-5717171

**தேசிய பொலிஸ் ஆணைக்குழு:**

தேசிய பொலிஸ் ஆணைக்குழு, டீஆஜஊர் வளாகம், கட்டிட இல.09, கொழும்பு 07

முறைபாடுகளுக்கு தொடர்பு கொள்ள - 1960 / 071-0361010

பொது தொடர்புகளுக்கு - 011-5107722

**மகளிர் உதவிகளுக்கான தொடர்பெண்**

பெண்களுக்கான தேசியக் குழுவின் பாலின அடிப்படையிலான

முறைபாடுகளுக்கான மையத்தின் 1938

அல்லது 011-2186063 / 011-2187038 மூலம்

தொலைநகல் - 011-2187288

மின்னஞ்சல் - secncwsl@gmail.com

**சட்ட உத்தியோகத்தர், பெண்களுக்கான தேசிய குழு.**

5வது மாடி, செத்சிரிபாய கட்டம் II, பத்தரமுல்ல.

011-2186063 / 011-2187038 ஐ அழைக்கவும்

மின்னஞ்சல் - secncwsl@gmail.com

**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்**

153, மிஹிந்து மாவத்தை, கொழும்பு 12.

தொலைபேசி - 011-2447134 / 011-2331697

தொலைநகல் - 011-2447134

மின்னஞ்சல் - info@basl

**இலங்கையின் சட்ட உதவி ஆணைக்குழு**

எண் 129, ஹல்ஸ்டொர்ப் தெரு, கொழும்பு - 12

தொலைபேசி: 011-2433618

## நிறுவனங்கள்

**EQUAL GROUND**

தொலைபேசி: 011-2075121 / 011-4334279

தொலைநகல்: 011-2075414

மின்னஞ்சல்: equalground@gmail.com

**WOMEN IN NEED**

தொலைபேசி: 011-4718585

connect@winsl.net

**சிறுவர்கள் பாதுகாப்பு படையணி**

011-4848856



BRIDGE to Equality - BRIDGE project which aims to improve the protection of human rights for LGBTQ people in Sri Lanka through the use of international human rights law to enable justice actors (judges, lawyers and other legal professionals), activists and human rights defenders to improve justice outcomes for the LGBTQ community; with a focus on overcoming challenges imposed by the current legal framework, as well as the overall promotion and protection of human rights of LGBTI people.

BRIDGE is jointly implemented by DAST, National Transgender Network and Young Out Here in partnership with the International Commission of Jurists since 2021.

---

BRIDGE to Equality යනු ශ්‍රී ලංකාවේ LGBTQ ප්‍රජාවන්ගේ මානව හිමිකම් සුරැකීම වෙනුවෙන් ක්‍රියාත්මක වන ව්‍යාපෘතියකි. ජාත්‍යන්තර මානව හිමිකම් සහ නීති පිලිබඳව විනිසුරුවරුන්, නීතීඥයින් සහ අනෙකුත් මානව හිමිකම් ක්‍රියාකාරීන් දැනුවත් කිරීම තුළින් ශ්‍රී ලංකාවේ LGBTQ පුද්ගලයින්ගේ මානව හිමිකම් සුරක්ශිත කිරීම, ශ්‍රී ලංකාවේ වත්මන් නීතිමය රාමුව විසින් පනවන ලද අභියෝග ජය ගැනීම කෙරෙහි අවධානය යොමු කිරීම, මානව හිමිකම් කඩ වූ ශ්‍රී ලංකාවේ LGBTQ පුද්ගලයින් හට යුක්තිය ලබා ගැනීමට ඔවුනට අවශ්‍ය සහය ලබාදීමද අරමුණු කරගනී.

BRIDGE to Equality ව්‍යාපෘතිය 2021 වසරේ සිට DAST, National Transgender Network සහ Young Out Here ආයතන විසින් ජාත්‍යන්තර නීතිවේදීන්ගේ කොමිෂන් සභාව සමග ඒකාබද්ධව ක්‍රියාත්මක කරනු ලබයි.

---

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) என்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினூடாக இலங்கையில் உள்ள LGBTQ மக்களுக்கான மனித உரிமைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாகும். LGBTQ சமூகத்திற்கான நீதி விளைவுகளை மேம்படுத்த நீதித்துறை வல்லுநர்கள் (நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் பிற சட்ட வல்லுநர்கள்), ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களை செயல்படுத்துவதனூடாக் தற்போதைய சட்டக் கட்டமைப்பால் சுமத்தப்படும் சவால்களை சமாளிப்பதுடன், LGBTQ மக்களின் மனித உரிமைகளின் ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது.

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) எனும் இந்த செயற்திட்டமானது DAST, தேசிய திருநர் வலையமைப்பு (NTN) மற்றும் யங் அவுட் ஹியர் (YOH) ஆகிய அமைப்புகளின் கூட்டாக 2021 முதல் பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

BRIDGE to EQUALITY
සමානාත්මතාවය සොයා...
சமத்துவத்தை தேடுதல்...


bridge2equality.org
bridgetoequalitycampaign@protonmail.com
facebook.com/BridgetoEquality
twitter.com/B2ECampaign
instagram.com/bridgetoequality2021
youtube.com/@bridgetoequality